(இ) உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரிமை மீறல் பிரச்சினைப் பற்றி. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து சில பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. உங்களுடைய உரிமை மீறல் பிரச்சினை என்னுடைய ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வரவும். சம்பந்தப்பட்ட உறுப்பினரையும் உங்களையும் அழைத்து வைத்துப் பேச இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. என்னுடைய அறைக்கு வாருங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : இங்கே சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, என்னுடைய அறைக்கு வாருங்கள். அங்கே வைத்து உங்களையும் சம்பந்தப்பட்ட உறுப்பினரையும் வைத்துப் பேச இருக்கிறேன். (குறுக்கீடு) போதும். போதும். அது அவையிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொன்னபிறகு நீங்கள் எழுப்பக்கூடாது. நான் எடுக்கவில்லை என்று சொல்கிறபோது, நீங்கள் எழுப்பக் கூடாது. உட்காருங்கள்.

(ஈ) இலங்கை அகதிகள், அவர்கள் விருப்பத்திற்கு மாறாக வெளியேற்றப்படுவது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நடைபெறும் போராட்டம் குறித்தும், அத்தகைய நடவடிக்கை வன்முறையைத் தூண்டுவதாகவும், இலங்கைப் போராளிகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருப்பது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களும் திரு. சி. ஞானசேகரன் அவர்களும் இலங்கைத் தமிழர்களை, அவர்களுடைய விருப்பம் இல்லாமலேயே வெளியேற்றுகிற பிரச்சினை குறித்து வெளியிலே ஒரு போராட்டம் நடப்பது குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை எழுப்ப அனுமதி அளித்திருக்கிறேன். திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே விருப்பம் தெரிவித்து இலங்கை செல்ல விரும்பும் இலங்கை தமிழ் அகதிகளை அனுப்புவதில் கருத்து வேறுபாடு இல்லை. சில முகாம்களில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்கு அனுப்புகிறார்கள் என்கின்ற புகார் வருகிறது. அதை அரசு கவனித்து ஆவனசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.